# ஜனவரி – 02 – செவ்வாய்

**புனித பசில்**

**உலகெங்கும் வாழ்வோரே! ஆனைவரும் ஆண்டவரை ஆர்ப்பரித்துப் பாடுங்கள்!**
**திபா. 98:4**

---------------------------------------------------------------

## முதல் வாசகம் : 1 யோவான் 2 : 22 – 28

அன்பான பிள்ளைகளே1 இயேசு "மெசியா" அல்ல என்று மறுப் போரைத் தவிர வேறு யார் பொய்யர்? தந்தையையும் மகனையும் மறுப்போர்தாம் எதிர்க் கிறிஸ்துகள். மகனை மறுதலிப்போர் தந்தையை ஏற்றுக்கொள்வதில்லை. மகனை ஏற்று அறிக்கை யிடுவோர் தந்தையையும் ஏற்றுக்கொள்கின்றனர். தொடக்கத் திலிருந்து நீங்கள் கேட்டறிந்தது உங்களுள் நிலைத்திருக்கட்டும் தொடக்கத்திலிருந்து நீங்கள் கேட்டறிந்தது உங்களுள் நிலைத்திருந்தால் நீங்கள் மகனுடனும் தந்தையுடனும் இணைந்திருப்பீர்கள். அவரே நமக்கு வாக்குறுதி அளித்துள்ளார். அவ்வாக்குறுதி நிலைவாழ்வு பற்றியதாகும். உங்களை ஏமாற்றுகிறவர்களை மனத்தில் கொண்டு இவற்றை உங்களுக்கு எழுதியுள்ளேன். நீங்கள் அவரிடமிருந்து பெற்றுக் கொண்ட அருள்பொழிவு உங்களுள் நிலைத்திருக்கிறது. அதனால் உங்களுக்கு எவரும் கற்பிக்க வேண்டிய தேவை யில்லை. மாறாக, நீங்கள் அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட அருள் பொழிவால் அனைத்தையும் கற்றுக்கொள்கிறீர்கள். அவ்வருள் பொழிவு உண்மையானது. பொய்யானது அல்ல. நீங்கள் கற்றுக் கொண்டதற்கேற்ப அவரோடு இணைந்து வாழுங்கள். ஆகவே, பிள்ளைகளே, அவர் தோன்றும்போது நாம் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கவும் அவருடைய வருகையின்போது வெட்கி விலகாதிருக்கவும் அவரோடு இணைந்து வாழுங்கள்.

**பதில்பாடல் :** உலகெங்குமுள்ள அனைவரும் நம் கடவுள் அருளிய விடுதலையைக் கண்டனர்.

## நற்செய்தி : யோவான் 1 : 19 - 28

அக்காலத்தில், எருசலேமிலுள்ள யூதர்கள் குருக்களையும் லேவியர்களையும் யோவானிடம் அனுப்பி, "நீர் யார்?" என்று கேட்டபோது அவர், "நான் மெசியா அல்ல" என்று அறிவித்தார். இதை அவர் வெளிப்படையாகக் கூறி, மறுக்காமல் ஒப்புக்கொண்டார். அப்போது, "அப்படியானால் நீர் யார்? நீர் எலியாவா?" என்று அவர்கள் கேட்க, அவர், "நானல்ல" என்றார் "நீர் தாம் வர வேண்டிய இறைவாக்கினரா?" என்று கேட்டபோதும், அவர், "இல்லை" என்று மறுமொழி கூறினார். அவர்கள் அவரிடம், "நீர் யார்? எங்களை அனுப்பியவர்களிடம் நாங்கள் மறுமொழி சொல்லியாக வேண்டும் எனவே உம்மைப்பற்றி என்ன சொல்கிறீர்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், ""ஆண்டவருக்காக வழியைச் செம்மையாக்குங்கள் எனப் பாலைநிலத்தில் குரல் ஒன்று கேட்கிறது"என்று இறைவாக்கினர் எசாயா உரைத்தது என்னைப்பற்றியே" என்றார். பரிசேயரால் அனுப்பப்பட்ட அவர்கள். அவரிடம், "நீர் மெசியாவோ எலியாவோ வர வேண்டிய இறைவாக்கினரே அல்லவென்றால் ஏன் திருமுழுக்குக் கொடுக்கிறீர்?" என்று கேட்டார்கள். யோவான் அவர்களிடம், "நான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கிறார். அவர் எனக்குப்பின் வருபவர் அவருடைய மிதியடிவாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை" என்றார். இவை யாவும் யோர்தான் ஆற்றுக்கு அக்கரையிலுள்ள பெத்தானியாவில் நிகழ்ந்தன. அங்குதான் யோவான் திருமுழுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

**தியானம்:** பிறந்திருக்கும் இப்புதிய ஆண்டில் நாங்கள் நிலைவாழ்வைப் பெற்றுக் கொள்வதற்காக மனமாறி எங்களை தூய்மைப்படுத்தியவர்களாக, தூய ஆவியானவரைப் பெற்றுக்கொண்டு தயார்படுத்த இன்றைய வாசகங்கள் அழைத்து நிற்கின்றது. எம்மத்தியில் காணப்படும் பாவங்களினாலும், பலவீனங்களினாலும் இறைவனை ஏற்றுக்கொள்ள தயங்கிவிடுகின்றோம், வெவ்வேறான அசுத்தமான, வெளிவேடமான காரியங்களுக்காக நேரத்தை செலவழித்து எம்மையே அழித்து விடுகின்றோம். “இயேசுவை ஏற்றுக் கொள்ள தவறுவோர் யாவரும் பொய்யர்” (1யோவா.1:22)ல் கூறுவதைப் பார்க்கின்றோம். இவற்றினால் இறைவன் எமக்கு அருளும் நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ளத் தவறிவிடுகின்றோம். ஆனால் எம்மைப் படைத்தவரோ விட்டுவிடவதில்லை. மாறாக நீங்கள் மீட்படைய, நிலவாழ்வை பெற்றுக்கொள்ள, உங்களுக்கு ஒரு துணையாளர் ஒருவரை அனுப்புவேன் என்று வாக்குப்பண்ணியிருக்கின்றார். இன்றைய நற்செய்தியில் குருக்களும், லேவியரும் திருமுழுக்கு யோவனிடம் நீர் மெசியாவா? இறைவாக்கினரா? ஏலியாவா? என்று பல கேள்விகளை கேட்டார்கள் ஆனால் அவரோ நானல்லேன் என்றார். நான் நீரினால் திருமுழுக்கு கொடுக்கின்றேன் ஆனால் எனக்குப் பின் வருபவரோ நீரினாலும், ஆவியினாலும் திருமுழுக்கு கொடுப்பார் என்பதை தெளிவுபடுத்தினார். எனவே அவர் கொடுக்க இருக்கும் திருமுழுக்கைப் பெற்றுக்கொள்ள நாங்கள் மனமாறியவர்களாக எங்களைத் தூய்மைப்படுத்தி நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள தூய ஆவியானவரிடம் வரம்வேண்டுவோம்.